**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி.**
**முன்னிலை . திரு எல். ரகுபதி ராஜா, M.C.S., B.L.,**
**நீதித்துறை நடுவர், பழனி.**
**2021ம் வருடம் டிசம்பர் மாதம் 08ம் நாள் புதன்கிழமை**
**<u>சி.ஆர்.எம்.பி.எண். 3069/2021</u>**

**வள்ளியாத்தாள் வயது 61/2021, த/பெ. கருப்புச்சாமி கவுண்டர், ஊத்துப்பாளையம், தளவாய்பட்டினம் அஞ்சல், தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.**

..மனுதாரர்/புகார்தாரர்

// எதிர் //

1) சித்ரா வயது 48/21, க/பெ.(லேட்) ராஜேந்திரன், தண்ணீர் கிணற்று தோட்டம், வன்னியன்வலசு, சாமிநாதபுரம், பழனி வட்டம்.

2) சூர்யா வயது 25/21, க/பெ. கார்த்தி, கொண்டரசாம்பாளையம், சித்தராவுத்தன்பாளையம் கிராமம், தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

3) பவித்ரா வயது 22/21, க/பெ. சிவானந்தன், சகுனிபாளையம், வரப்பாளையம் கிராமம், தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

4) கார்த்திக் வயது 30/21, த/பெ. திருமலைசாமி, சகுனிபாளையம், வரப்பாளையம் கிராமம், தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

5) சிவானந்தன் வயது 30/21, த/பெ. தங்கமுத்து, சகுனிபாளையம், வரப்பாளையம் கிராமம், தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

6)சௌந்தரராஜ் வயது 30/21, த/பெ. வேலுச்சாமி, சகுனிபாளையம், வரப்பாளையம் கிராமம், தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

7)செல்வராஜ் வயது 60/21, த/பெ. காளிமுத்து, சகுனிபாளையம், வரப்பாளையம் கிராமம், தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

.... எதிரிகள்

சார்பு ஆய்வாளர் அவர்கள்,
சாமிநாதபுரம் காவல் நிலையம்,
பழனி.

... எதிர்மனுதாரர்

இம்மனு இன்று 08.12.2021 ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே. மணிசேகர் அவர்கள் நேரில் ஆஜராகி வாதிட்டதைக் கேட்டறிந்து இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>**உத்தரவு**</u>

1) இப்புகார் மனுவானது பிரிவு 156(3) கு.வி.மு.ச.ன் படி சாமிநாதபுரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளருக்கு புகாரை அனுப்பி எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) புகார் மனுவில், மனுதாரருக்கும் 1ம் எதிரியின் கணவர் ராஜேந்திரன், ஈஷ்வரன், சாந்தி கலைச்செல்வி, கலாமணி, விசாலாட்சி, இந்திராணி ஆகியோர்கள் உடன்பிறந்தவர்கள் என்றும், இவர்களுக்கு பூர்வீக சொத்துக்களில் வந்த வருமானத்தில் மேற்படியார்களின் தந்தை கருப்புச்சாமி பெயருக்கு புஸ்பத்தூர் கிராமத்தில்0.41.5 செண்ட் அளவுள்ள நிலத்தை விலைக்கு வாங்கியுள்ளதாகவும், கிரைய நிலத்திலிருந்து கருப்புச்சாமி உட்பட மற்றவர்கள் கூட்டாக அனுபவித்து வந்ததில் ராஜேந்திரன் இறந்த பின்னர் கருப்புச்சாமி கவுண்டரை கடந்த 11.12.2020ம் தேதியன்று ஏமாற்றி மிரட்டி 1,2 எதிரிகள் மீது செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வாங்கியதாகவும், 1 முதல் 5 எதிரிகள் சேர்ந்து தங்களின் உறவினர்களுக்கு கடந்த 21.12.2020ம் தேதியன்று ஈடுபதிவுப் பத்திரம் பதிவு செய்ததை அறிந்த கருப்புச்சாமி கவுண்டர் மேற்படியார்கள் மீது சாமிநாதபுரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், விசாரணை அதிகாரி சட்டப்படி நடிவடிக்கை எடுப்பதாக கூறி நம்பிக்கை ஏற்படுத்தி தங்களிடம் வெற்றுதாளில் கையொப்பம் வாங்கி கொண்டதாகவும், புகாரின் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், பத்திரம் செல்லத்தக்கதல்ல என அறிவிக்க கோரியும், பாகம் கோரியும் பழனி கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் அ.வ. எண். 29/2021 ஆக மேற்படி எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், கடந்த 05.03.2021ம்தேதி மனுதாரரும், உடன் பிறந்த சகோதரிகளும் பொது பித்துவை மேற்படி எதிரிகள் ஒரு பகுதியை எடுத்து சென்றுவிட்டதாக தகவல் கிடைத்து போய் பார்த்தபோது மீதமுள்ள பித்துவை திருடிச் செல்ல எத்தணித்து வருவது தெரியவந்து சிவானந்தம் மற்றும் செளந்தரராஜ், செல்வராஜ் ஆகீயோர்களிடம் சென்று கேட்டபோது மனுதாரரை கண்டாரோழி, தேவடியா என அசிங்கமாக பேசி நீதாண்டி எல்லாவற்றிற்கும் காரணம் நீதான் உன்னை கொலை செய்துவிட்டால் பிரச்சனையே தீர்ந்துவிடும் எனவும், பழனி DSP யிடம் சொல்லிவிட்டுத்தான் பித்துவை அள்ளுகிறோம் உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் எனக்கூறி மனுதாரரை கீழே தள்ளிவிட்டு, கொலை மிரட்டல் விடுத்தும், அனைவரின் முன்பு சேலையை உருவி மனுதாரரை மானபங்கபடுத்தியதாகவும், அங்கிருந்த மனுதாரர் சகோதரிகள் காப்பாற்றி வீட்டிற்கு அழைத்து வந்தனர் என்றும், மனுதாரர் எதிரிகளுக்கு எதிராக கொடுத்த புகார் மீது எவ்வித சட்டப்பூர்வ நடவடிக்கையும் எடுக்காததால் எதிரிகள் மனுதாரர் மற்றும் உடன்பிறந்த சகோதரிகளை பார்க்கும்போதெல்லாம் அசிங்கமாக திட்டி

குடும்பத்தை கேவலமாக பேசியும், புகார் கொடுத்தால் நாங்கள் பயப்படமாட்டோம், காவல்நிலையமே எங்கள் கையில்தான் என மிரட்டி வந்ததால் மேல் நடிவக்கைக்காக மனுதாரர் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அவர்கள், பழனி மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள், பழனி தாலுகா காவல்நிலைய ஆய்வாளர், சாமிநாதபுரம் காவல்நிலைய ஆய்வாளர், 20.05.2021ம் தேதியன்று பதிவு அஞ்சல் மூலம் திண்டுக்கல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோருக்கும் புகாரை அனுப்பியதாகவும், புகாரை பெற்றுக்கொண்டு இதுநாள் வரை எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க சாமிநாதபுரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளருக்கு உத்தரவிடவேண்டும் என இப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) மனு மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அசிங்கமாக பேசி நீதாண்டி எல்லாவற்றிற்கும் காரணம் நீதான் உன்னை கொலை செய்துவிட்டால் பிரச்சனையே தீர்ந்துவிடும் எனவும், பழனி DSP யிடம் சொல்லிவிட்டுத்தான் பித்துவை அள்ளுகிறோம் உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் எனக்கூறி மனுதாரரை கீழே தள்ளிவிட்டு, கொலை மிரட்டல் விடுத்தும், அனைவரின் முன்பு சேலையை உருவி மனுதாரரை மானபங்கபடுத்தியதாக கூறி எதிரிகள் மீது நடிவக்கை எடுக்கவேண்டுமென புகாரில் கூறப்பட்டுள்ளது. புகாரில் கூறப்பட்டுள்ள குற்றங்கள் பிடியாணை இல்லாமல் கைது செய்யக்கூடிய குற்றங்களாக இருப்பதாலும் வழக்கின் உண்மைத்தன்மையை பொறுத்து விசாரணை செய்யவேண்டி அவசியம் இருப்பதாலும், காவல்துறை விசாரணைக்கு உத்தரவிட இம்மனு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

4) முடிவாக, இம்மனுவை சாமிநாதபுரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளருக்கு அனுப்பி வழக்கில் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் உரிமையியல் பிரச்சினை உள்ளடங்கி இருப்பது தெரியவருவதாலும் வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் "Lalithakumari case Vs Govt. of UP and Others" வழக்கில் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளின்படி புகார் தொடர்பாக முதல் விசாரணை(Priliminary Enquiry) மேற்கொண்டு தேவைப்பட்டால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உரிய விசாரணை மேற்கொள்ளவும் இந்நீதிமன்றத்திற்கு 08.02.2022 ம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்யவும் உத்தரவிடப்படுகிறது அழைக்க 08.02.2022.

2021ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம். திரு. எல். ரகுபதிராஜா
நீதித்துறை நடுவர்,
பழனி.